சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.25.02.2025
OS.No.29/2021
DW1 : பாத்திமா (வயது 50) க/பெ.உறபிப் ரகுமான்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனக்கு எழுத படிக்க தெரியும். நான் சிறுகாம்பூர், செந்தாமரைகண், குடித்தெரு, பிச்சையம்மன் நகரில் குடியிருந்து வருகிறேன். மேற்படி முகவரியில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அந்த முகவரிக்கு தான் சம்மன் சார்வு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி முகவரியில் தான் அனைத்து கடித போக்குவரத்துகளும் வருகிறது என்றால் சரிதான். எனக்கு 3 மகன்கள் இருக்கிறார்கள். நான் மற்றும் எனது கணவர் இருவரும் சிறுகாம்பூர், சோளங்கநல்லூர் செல்லும் சாலையில் மேற்கே கறி கடை வைத்துள்ளோம் என்றால் சரிதான். வாதி நான் வசிக்கும் பகுதியிலிருந்து 1 கி.மி தொலைவில் உள்ள சோளங்கநல்லூர் கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். சிறுகாம்பூரை ஒட்டி மேற்கே சுமார் 1 கி.மி துாரத்தில் ராமகிரிபட்டி என்ற ஊர் உள்ளது என்றால் சரிதான். வழக்கில் சாட்சியம் கூறியுள்ள கார்த்திக்ராஜா என்பவர் ராமகிரிபட்டியை சேர்ந்தவர் என்று நீதிமன்றத்திற்கு வந்த பிறகு கேட்டு தெரிந்து கொண்டேன். மேற்படி கார்த்திக் ராஜாவிற்கும் எனக்கும் எந்த விரோதமும் இல்லை என்றால் சரிதான். நான் வசதி வாய்ப்புடையவர் என்றால் இல்லை. எனக்கு குளித்தலை, மணத்தட்டையில் வீட்டு மனை உள்ளது என்றால் இருந்தது விற்று விட்டேன். அந்த வீட்டு மனையை 7,8 வருடத்திற்கு முன்பு வாங்கி பின்பு விற்று விட்டேன் என்றால் தெரியவில்லை, எனது மகன்கள் விற்றார்கள் வருடம் தெரியவில்லை. மேற்படி வீட்டு மனை கிரயம் வாங்கி விற்கப்பட்டது என்றால் சரிதான். எனது மகன்களில் 2 மகன்களுக்கு வெளிநாடு சென்று வருவதற்கான கடவு சீட்டு உள்ளது. எனது இரண்டு மகன்களும் வேலை விசயமாக வெளிநாடு செல்வார்கள் என்றால் சரிதான். 10 ஆண்டுகளுக்கு முன்பு

வெளிநாடு சென்றார்கள், 4 ஆண்டுகளுக்கு முன்பு திரும்பி வந்து விட்டார்கள் அதன் பிறகு செல்லவில்லை.நான் தாக்கல் செய்துள்ள எனது நிருபண வாக்குமூலத்தில் எனது கணவர் பெயர் சாகுல் உறமீது என்று எழுதி அடித்துவிட்டு உறபிப் ரகுமான் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் வாதி ஆறுமுகத்தை தெரியும் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். கடைக்கு வரும் வகையில் தெரியும். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வந்த வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் இந்த வழக்கின் வழக்குரை ஆகியவற்றின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டது தான் எனது தரப்பு எதிர்வழக்குரை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணம் தான் எனக்கு வாதியால் அனுப்பப்பட்ட அறிவிப்பு என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை. வா.சா.ஆ.2 ஆவணம் எனக்கு பதிவு தபால் மூலம் வந்தது. மேற்படி பதிவு தபாலை சிறுகாம்பூர் கிராம அஞ்சலக அலுவலர் என்னிடம் வந்து தபாலை கொடுத்து விட்டு ஒப்புகையில் கையொப்பம் வாங்கி சென்றார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணம் தான் மேற்படி ஒப்புகை ஆவணம் என்றால் சரிதான். அதில் உள்ள கையெழுத்து அஞ்சலக அலுவலர் முன்னிலையில் நான் செய்த கையெழுத்து என்றால் சரிதான். நான் வசதி வாய்ப்பு இல்லாத நிலையில் இருப்பதால், வெளியில் கடன் வாங்கி எனது குடும்பத்தை பராமரிக்கும் நிலையில் இருக்கிறேன் என்றால் அதை பற்றி எனது கணவரிடம் தான் கேட்க வேண்டும். எங்களது கறிகடையில் நானும் எனது கணவரும் மற்றும் எனது பிள்ளைகளும் சேர்ந்து தான் வேலை செய்வோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 அறிவிப்பினை சம்மந்தப்பட்ட அஞ்சலக அலுவலர் எனது வீட்டை விசாரித்து வந்து கொடுத்து சென்றார் என்றால் சரிதான். எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள தொழில் வரி பி.வா.சா.ஆ.5,6 ஆவணங்கள் இரண்டும் 2018 க்கு பின்னிட்டு 2020 ல் ஏற்பட்ட ஆவணம் என்றால் அதனை பார்த்தால் தான் சொல்ல முடியும், அந்த தொழில் வரி எனது கணவர் கட்டியது. நான் வசிக்கும் பகுதியில் தாயுமான் லிங்கம் என்கிற செல்லதுரை பட்டறை உள்ளது என்றால் சரிதான்.

**<u>கு.வி தொடர்ச்சி</u>** - வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் மறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/signed /

பாத்திமா

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி